DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 149/2016
****

Deposition of Witness for : DW1

Name : வேல்முருகன்

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 17.09.2025

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். நான் பிரதிவாதி தரப்பு முதலாம் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். நான் N.V. Shunmugam & Co என்ற பெயரில் என்.வி.எஸ் பட்டணம் பொடி விற்பனை செய்து வருவதற்குரிய டீலர்ஷிப் சான்று அசல் ( N.V. Shunmugam & Company வழங்கியது) பி.வா.சா.ஆ.1 ஆகும். 07.06.1996ல் வழக்கு 23வது அயிட்ட சொத்தை நான் சுப்பிரமணியன் பிள்ளை குமாரர்கள் முனியப்பப்பிள்ளை –1, வேலாயுதம் பிள்ளை – 2, பழனிவேல் –3, மற்றும் பாலசுப்பிரமணியன் –4 ஆகியோர்களிடமிருந்து கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.476/1996ன் படி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் S.R.O ஒளிநகல் பி.வா.சா.ஆ.2 ஆகும்.

31.12.2003 ல் வழக்கு 7 ம் அயிட்ட சொத்தை நான் ராணி என்ற செல்லம்மாள் –1, ராணி என்ற செல்லம்மாள் என்பவரின் மகள் மைனர் முத்துக்கனி –2 ஆகியோர்களிடமிருந்து கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.1758/2003 ன் படி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் S.R.O ஒளிநகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். 20.06.1998 ல் வழக்கு 6 வது அயிட்ட சொத்தை நானும், 1 ம் பிரதிவாதியும் கூட்டாக ராமசுப்பையா என்பவரிடமிருந்து கரிவலம்வந்தநல்லூர் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.625/1988 ன் படி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் S.R.O ஒளிநகல் பி.வா.சா.ஆ.4 ஆகும். வழக்கு 18 வது அயிட்ட சொத்தை புன்செய் புல எண் . 877/2B ஐ பொறுத்து எனது பெயரில் பட்ட எண்.2051 ( தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கியது அசல்) பி.வா.சா.ஆ.5 ஆகும். வழக்கு 17 வது அயிட்ட சொத்தை புன்செய் புல எண் . 877/2 A ஐ பொறுத்து எனது பெயரில் பட்ட எண்.3705 ( தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வழங்கியது அசல்) பி.வா.சா.ஆ.6 ஆகும். 09.09.1991 ல் வழக்கு 25 வது அயிட்ட சொத்தை நான் லேட்சுமண பிள்ளை –1 முனியாண்டி –2 ஆகியோர்களிடமிருந்து கரிவலம்வந்தநல்லூர் அலுவலக கிரைய ஆவணம் எண். 778/1991 ன் படி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் S.R.O ஒளிநகல் பி.வா.சா.ஆ.7 ஆகும்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**